நோயாளிகள் கஷ்டப்பட்டார்களா என்பது கேள்வி. அவர்கள் கஷ்டப்படவில்லை. ஏனென்றால் டாக்டர்கள் செவிலியர்கள், மற்ற ஊழியர்களைக்கொண்டு உணவுத் தயாரிப்பு வேலை முடிந்து விட்டது. வேலை நிறுத்தம் ஒரு வேளை நடந்தது. ஒரு நாள் முழுவதும் நடைபெறவில்லை. வேலை நிறுத்தம் ஒருவேளை நடைபெற்றாலும் நோயாளிகள் கஷ்டப்படவில்லை. அவர்கள் கஷ்டப்படாமல் இருக்கும் அளவுக்கு, டாக்டர்கள், செவிலியர்கள், ஊழியர்களைக் கொண்டு அந்தத் தொல்லை ஏற்படாத அளவுக்கு, பரிமாறப்பட்டிருக்கிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இதுபோன்ற மருத்துவ மனைகளில் இந்தவிதமாக ஸ்டிரைக் செய்யப்படுவதன் காரணமாக எப்படியாவது நோயாளிகள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்பொழுது, அந்த ஸ்டிரைக் செய்தவர்கள் நியாயத்தின் அடிப்படையில் செய்தார்களா, அதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிய அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பொதுப்படையாக துணை வினா அமைந்திருக்கிறது. கூடுமான வரையில் வேலைநிறுத்தம்பற்றி முன்கூட்டியே அறிந்தால், நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையெல்லாம் அரசும், மருத்துவத் துறை அதிகாரிகளும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, சட்டத்திற்குப் புறம்பாக, ஒழுங்குக்குப் புறம்பாக வேலைநிறுத்தம் செய்யப்பட்டால் தக்க நடவடிக்கைகள் அதுபற்றியும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, ஒருவேளை ஸ்டிரைக் செய்யப்பட்டதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அப்படி ஒருவேளை ஸ்டிரைக் செய்தது என்ன காரணத்தினால்? அப்படி அவர்கள் ஸ்டிரைக் செய்வதால் நோயாளிகளுக்குத்தான் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, அதை நிவர்த்திக்க, அப்படிப்பட்ட நேரங்களிலே வேறு இடங்களிலேயிருந்து அவசர காலப் பணியாளர்களை வைக்க அரசாங்கம் முயற்சியெடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு வேளை வேலைநிறுத்தம் செய்தார்கள். அப்பொழுது செவிலியர்கள், டாக்டர்கள், ஊழியர்கள் உணவுத் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டு நோயாளிகளுக்குக் கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. வேலை நிறுத்தத்திற்கான காரணம் இங்கு தரப்படவில்லை. தனிக்கேள்வி போட்டால் சொல்லலாம்.

அடையாறு சென்ட்ரல் பாலிடெக்னிக்

** 134 வினா*—**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு சென்ட்ரல் பாலிடெக்னிக் பள்ளியில் Fisheries Technology and Navigation பிரிவில் பயிற்சிக்காகப்

படகு வாங்குவதற்குத் திட்டம் எப்போது தயாரிக்கப்பட்டது?

(இ) படகு எப்போது வாங்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ரூ. 75,000 செலவில் மீன்பிடி படகு ஒன்றை வாங்க 1956-ம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப் பட்டபோது இதன் செலவு சுமார் ரூ. 1 லட்சமாகியது. இந்த அதிக அளவுச் செலவின் காரணமாக மீன்பிடி படகு வாங்க வேண்டாம் என முடிவு செய்யப்பட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தப் பயிற்சியின் முக்கியத்துவம் கருதியாவது இனியாவது இந்தப் படகு வாங்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் படகை வாங்கி வைத்துப் பயிற்சி அளிக்கலாம் என்ற எண்ணத்தின்மீதுதான் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பொழுது Chairman, Madras Port Trust மீன்துறை இயக்குநர் ஆகியோரின் ஒப்பந்தத்தின் அடிப்படையில், பயிற்சி பெறப் படகுகள் கிடைக் கின்றன. ஆகவே, தனியாக வாங்க வேண்டியது இல்லை என்று முடிவு செய்யப்பட்டது.

Full time course in Commercial Practice

* 135 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the duration of the full time Diploma course in Commercial Practice conducted by the Institute of Commercial Practice has been increased?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வாணிபப் பயிற்சி முழுநேரத் தகுதிப்பட்டயப் படிப்பின் பயிற்சிக் கால அளவு இரண்டாண்டினின்று மூன்றாண்டுகளாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த வாணிபப் பயிற்சியில் முழுநேரத் தகுதிப்பட்டயப் படிப்பில் தேர்ச்சிபெற்ற அத்தனை பேருக்கும் வேலை அளிக்கப்பட்டிருக் கிறதா? அப்படியில்லையென்றால், வேலையில்லாமல் இருப்பவர்கள் எத்தனை பேர்? அரசாங்கத்திலே வேலைக்கு எடுத்துக்கொள்ளத் தமிழ்த் தட்டெழுத்துப் பயிற்சியும் பெற்றிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்தப் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களில் எவ்வளவு பேர் கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்ற குறிப்பு இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு வேலை கிடைக்கிறதோ அந்த அளவுக்கு